பாடம்-4

## தேவனின் நியாயத்தீர்ப்பு - மாபெரும் வெள்ளம்

### ஆதாமிலிருந்து நோவா வரை

ஆதாமும் ஏவாளும் படைக்கப்பட்டு சுமார் 1600 ஆண்டுகள் கழித்து உலகத்திலுள்ள யாவரும் கீழ்ப்படியாமலிருக்கிற அளவிற்கு உலகம் பாவத்தில் மூழ்கியது. இந்த பாவம் நிறைந்த உலகத்தில் ஒரு நீதிமான் குடும்பத்தோடு வாழ்ந்து வந்தார். அவர் பெயர் நோவா. உலகம் இவ்வளவு பாவத்தில் நிறைந்திருந்தால் தேவன் தீயவர்கள் அனைவரையும் அழித்துவிட்டு, நோவாவையும், அவர் குடும்பத்தையும் மட்டுமே இரட்சிக்க (பாதுகாக்க) விரும்பினார்.

### பேழையைக் கட்டுதல்

தேவன் நோவாவைப் பார்த்து ஒரு பேழையைக் கட்டும்படி கூறினார். பேழை என்பது ஒரு பெரிய கப்பல். இதில் நோவாவும், அவர் குடும்பமும், மிருகங்களும் தங்கிக்கொள்ளும்படி தேவன் கூறினார். நோவா பேழையைக் கட்டிக்கொண்டிருக்கும்போது மக்கள் மனம்திருந்தி தேவனுக்கு கீழ்ப்படிய வேண்டும் என விரும்பி அவர்களை கீழ்படிய வைக்க தொடர்ந்து பிரசங்கமும் செய்தார். இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய பாடம் எனன்வெனில், இவ்வுலகத்தில் ஒருவர் கூட நியாயத்தைச் செய்யாவிட்டாலும் நாம் நோவாவைப் போல் ஜீவித்து தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டும்.

இறுதியாக மாபெரும் வெள்ளத்தை அனுப்ப வேண்டிய காலம் வந்தது. தேவனுடைய கட்டளைப்படியே நோவா மிருகங்களையும், தனது மனைவியையும், அழைத்துக் கொண்டு பேழைகள் சென்றார். இதை தெளிவாக அறிய ஆதியாகமம் 6-8 அதிகாரங்களை வாசியுங்கள்.

### மாபெரும் வெள்ளம்

பூமியிலுள்ள வெட்டாந்தரைகளும் உயர்ந்த மலைகளும் வெள்ளத்தில் மூழ்கும்படி 40 நாள் இரவும் பகலும் பூமியின் மீது மழை பெய்தது. பாவம் நிறைந்த மக்கள் யாவரும் இப்பெரும் வெள்ளத்தில் மாண்டனர். நோவாவும், அவர் குடும்பமும் ஓராண்டு காலம் பேழையிலேயே இருந்துவிட்டு பின்பு வெளியே வந்தனர்.

பேழையை விட்டு வெளியே வந்தவுடன் நோவா தேவனை ஆராதித்தான். இனி தேவன் ஜலத்தினால் இவ்வுலகை அழிக்கமாட்டார் என்று எல்லா மனுஷருக்கும் தேவன் செய்த வாக்குத்தத்தத்தின் அடையாளமாக தேவன் வானவில்லை வானத்தில் வைத்தார். பேதுரு 3:7-12 வரை வாசிக்கவும்.

நோவாவிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள்

<u>1. தேவன் பாவத்தை வெறுக்கிறார்:</u> தனக்குக் கீழ்ப்படியாதவர்களின்மேல் தேவன் தனது நீதியான நியாயத்தீர்பை வழங்குவார்.

<u>2 தேவன் கீழ்ப்படிதலை எதிர்பார்க்கின்றனர்:</u> தேவன் நோவாவிடம் பேழையைக் கட்டுபடி கூறினார். நோவா பேழையை கட்டாமல் கீழ்ப்படியாமல் இருந்திருந்தால் அவரும் மற்றவர்களைப் போலவே அழிக்கப்பட்டிருப்பார்.

<u>3 தேவன் முழுமையான கீழ்ப்படிதலை எதிர்பார்க்கின்றார்:</u> பேழையை கட்டுவதற்கு தேவன் சொன்ன மரத்தைத் தவிர வேறொரு மரத்தை நோவா பயன்படுத்தியிருந்ததால், உலகத்தாரைப்போல அவரும்தான் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போயிருப்பார். நாமும்கூட தேவன் சொன்னவைகளை அப்படியே கடைப்பிடிக்க வேண்டும். தேவன் சொன்னவைகளில் ஒன்றைக்கூட இன்றைக்கு நாம் மாற்ற முடியாது.(உபாகமம் 12:32; நீதிமொழிகள் 30:6; கலாத்தியர் 1:8,9; வெளிப்படுத்தல் 22:18,19).